UNIVERSITY OF SRI LANKA JAFFNA
RECEIVED
PERIODICALS DIVISION

பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
The EELANADU

மலர் 20 ஆவணி 7 நம்நாள்: 18 இதழ்: 193
யாழ்ப்பாணம் புதன்கிழமை 23-8-78

## கென்யா ஜனாதிபதி கென்யாட்டா மரணம்

நைரோபி, ஆக. 22

கென்யா ஜனாதிபதி திரு. ஜோமோ கென்யாட்டா நேற்றுக்காலை காலமானார். மொம்பாஸா விலுள்ள தமது மாளிகையில் அவர் உறங்கிக்கொண்டிருக்கையில் உயிர்நீத்ததாகக் கூறப்பட்டது.

1964ம் ஆண்டு கென்யாவின் ஜனாதிபதியாகப் பதவி எற்ற திரு. கென்யாட்டா காலமாகும்வரை அப்பதவியை வகித்துவந்தார்.

பிரிட்டிஷாரின் காலனி ஆதிக்கத்திலிருந்த கென்யாவை விடுதலைசெய்வதற்காக பல புரட்சி இயக்கங்களை திரு. கென்யாட்டா நடத்தினார். அதன்காரணமாக அவர் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் பல ஆண்டுகள் சிறையில் அடைக்கப்

(6-ம் பக்கம் பார்க்க)

ஆகஸ்ட் கலவரத்தில்

# "யாழ்ப்பாணத்தில் சிங்களவர் எவரும் கொலையுறவில்லை"

## குறுக்கு விசாரணையில் சாட்சி ஒப்புக்கொண்டார்

(கொழும்பு)

கடந்த வருடம் நடந்த கலவரத்தின்போது யாழ்ப்பாணத்தில் சிங்களவர் எவரும் கொலை செய்யப்படவில்லை; பௌத்த கோயில்கள் சேதப்படுத்தப்படவில்லை சிங்களப்பெண்கள் எவரும் முறைகேடாக நடத்தப்படவில்லை என்பதை சன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளித்த முகாமைத்துவ ஆலோசகர் திரு. நிகால் கனகரத்ன என்பவர் நேற்று ஒப்புக்கொண்டார்.

பார்ன்பிளேசைச் சேர்ந்த மேற்படி சாட்சியைச் சட்டத்தரணிகள் பலரும் குறுக்கு விசாரணை செய்தபின்னர் சட்டத்தரணி திரு அன்டலூட், தாம் சாட்சியிடம் ஒரே ஒரு கேள்வி மாத்திரமேகேட்க விரும்புவதாகத் தெரிவித்துவிட்டு, சாட்சியைப் பார்த்து இவ்வளவுக்கும் பின்னராவது யாழ்ப்பாணத்தில் ஒரு சிங்களவராவது கொல்லப்படவில்லை, பௌத்த கோயில் எதுவும் உடைக்கப்படவில்லை, சிங்களப் பெண் எவரும் முறைகேடாக நடத்தப்படவில்லை என்பதை ஒப்புக்கொள்கின்றீரா? என்று கேட்டார். சாட்சி 'ஆம்' என்று பதிலளித்தார்.

சிங்கள இளைஞர் பேரவை சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் சாட்சியை இப்போதைய அரசியல் சட்டம் பற்றிக் குறுக்குவிசாரணை [illegible] விசாரணைக்கும் தொடர்பில்லையென்றும், இது அரசியல் நீதிமன்றமில்லையென்றும், ஆணைக்குழுத் தலைவர் திரு. சன்சோனி கூறினார்.

சட்டத்தரணி பேர்சி கருணரத்ன, திரு. டபிள்யு. பி. எல். ஈ. டி. சில்வா என்பவரால் எழுதப்பட்ட 'தொழிலாளர் சட்டம்' என்ற நூலிலிருந்து மட்டக்களப்பு, திருக்கோணமலைப் பகுதிகளில் சிங்களவர் [illegible] பகுதிகளைக் கமிஷன் முன் வாசித்துச் சாட்சியிடம் கேள்விகள் கேட்டபோது, அதனைச் சட்டத்தரணி சண்முகலிங்கம் ஆட்சேபித்தார்.

கமிஷனர் திரு சன்சோனியும் இதனை ஏற்கமுடியாதென்றும்

(6-ம் பக்கம் பார்க்க)

## பரு. மகளிர் கல்லூரி சம்பளப்பணம் கொள்ளை
### துப்பாக்கி ஏந்திய இளைஞர் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை இந்து மகளிர் கல்லூரி ஆசிரியைகளின் சம்பளப் பணமான 8752 ரூபா துப்பாக்கி முனையில் நேற்று முன்தினம் கொள்ளை [illegible]

சம்பளப் பணம் வங்கியில் இருந்து ஆயுதம் தாங்கிய பொலிஸ் பாதுகாப்புடன், கல்லூரிக்குக் கொண்டுவரப்பட்டு அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும், அதன் பின் பொலிஸார் திரும்பிச் சென்றுவிட்டதாகவும், இதனைத்தொடர்ந்து கொள்ளை நடைபெற்றதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

அதிபரும் மற்றும் சில ஆசி

(6ம் பக்கம் பார்க்க)

## இன்று வேலைநிறுத்தம் செய்வர்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல. நோ. கூட்டுறவுச் சங்க 450 ஊழியர்கள் இன்று அடையாள வேலை நிறுத்தத்தில் குதிப்பர்.

நேற்றுமாலை பண்டத்தரிப்பு கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்க சம்மேளனச் செயலாளர் திரு. மு. வேலாயுதபிள்ளையும் இலங்கை வர்த்தக ஊழியர் சம்மேளன கிளைச்செயலாளர் திரு. க. ஜெயவிக்கிரகுமாரனும் வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் நிர்வாக உப தலைவரின் ஒருவரின் நடத்தையைக் கண்டிக்குமுகமாக இவ் அடையாள வேலைநிறுத்தம் நடைபெறுவதாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

## 'தமிழருக்கு அழியாப்புகழை தேடித்தந்தார் கலாயோகி

-- பேராசிரியர் வித்தியானந்தன்

(யாழ்ப்பாணம்)

கலாயோகி ஆனந்தகுமாரசாமி உலகின் பலபாகங்களிலுமுள்ள கலை. பண்பாடுகள் சம்பந்தமான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு உலகம் முழுவதும் அழியாப் புகழைத் தமிழருக்குத் தேடித்தந்தார். அன்னாருடைய உருவத்தை கண்ணைக்கவரும் வகையில், சிறந்த கலையம்சத்துடன் வரைந்த செல்வி மஞ்சுளா துரைராஜா பெரிதும் பாராட்டப்படவேண்டியவர். இளம்வயதில் அன்னரது கலையார்வம் எழிற்சியை ஊட்டுவதாய் உள்ளது. என்று யாழ் வளாகத் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் யாழ். பொதுசன நூலகத்தில் கலாயோகி ஆனந்த குமாரசாமியின் உருவப்படத்தைத் திரைநீக்கம் செய்து வைத்து உரையாற்றுகையில் கூறினார்.

கலாயோகி ஆன்ந்தகுமாரசாமி நூற்றாண்டு விழாவையொட்டி நேற்றுக் காலை, யாழ். மாநகரமுன்றலில் அமைந்திருக்கும் கலாயோகி ஆனந்தகுமாரசாமி சிலைக்கு பிரமுகர்களும் பொதுமக்களும் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

பின்னர் ஆனந்தகுமாரசாமியின் உருவப்படத்தை பேராசிரியர் சு. வித்தியானந்தன் திரைநீக்கம் செய்து வைக்க, செல்வா அறங்காவல் குழுச் செயலாளர் திரு. க. சச்சிதானந்தம் மாலை அணி

(6ம் பக்கம் பார்க்க)

## அரசுடன் தொண்டமான் சேர்வாரா?

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் மஸ்கேலியா—நுவரெலியாத் தொகுதியின் மூன்வது உறுப்பினருமான திரு. எஸ். தொண்டமான் அரசாங்கத்துடன் இணையக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக அரசியல் வட்டாரங்களில் பலமான ஹேஷ்யங்கள் நிலவுகின்றன.

இதுபற்றி திரு. தொண்டமானிடம் கேட்டபோது "அரசாங்கம் அப்படி ஒரு கோரிக்கையை விடுத்தால் அதுபற்றி எமது பொதுச்சபை ஆராயும். அது •டுக்கும் முடிவின்படியே நான் நடந்துகொள்வேன்" என்றார்.

செப்டம்பர் 7ல் புதிய அரசியல்சட்டம் அமுலுக்கு வந்த

(6-ம் பக்கம் பார்க்க)



இன்று குதூகலத் திறப்புவிழா
HONDA MOTOR CYCLE SALES AGENCY
ஹொண்டா மோட்டர் சைக்கிள் சேல்ஸ் ஏஜென்சி
காலம்: 23-08-1978 புதன்கிழமை மாலை 5-30
இடம்: 21, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
புதிய விற்பனைச் சாலையை யாழ்ப்பாண எம். பி.
உயர் திரு. வெ. யோகேஸ்வரன் திறந்து வைப்பார்
அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்
மு. கந்தசாமி, தெய். இந்திரகுமார்
கன்டாபியா மோட்டோர்ஸ் (CANTABIA MOTORS)
பங்குதாரர்கள்.
23-08-78 0118

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கச்சானும், தேங்காயும் சில்லறையாகவும் மொத்தமாகவும் விற்கப்படும். கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். E. A E. I. D கம்பெனி பிரதான வீதி, காங்கேசன்துறை. 0073

விசுவமடுவில் புளியடிச் சந்திக்கு அரை மைலுக்குள், பிரதான வீதிக்கு அருகாக பத்து ஏக்கர் பிரச்னை இல்லாத திருத்திய காணி விற்பனைக்கு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி; எஸ். கந்தசாமி, சட்டத்தரணி, சாவகச்சேரி 0112

புங்குடுதீவு 3-ம் வட்டாரத்தில், நெடும்பனையில் உள்ள கல்வீடும் வளவும், சோனகன் தோட்டத்திலுள்ள நெற்காணியும், துணியன்காட்டுப் பனங்காணியும் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். தங்கவேல், 23, 2-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 0114

## தேவை

விற்பனைப் பிரதிநிதி மூவர் தேவைப்படுகின்றனர். தொடர்பு கொள்க: E. A. E. I. D. கம்பெனி பிரதான வீதி காங்கேசன் துறை. 0074

# அஞ்சல் எ. வி. சங்கம்

[கொழும்பு]

அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தின் 17வது ஆண்டுப் பொதுக்கூட்டம் செப்டம்பர் 4ம் திகதி கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது. தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களின் பல்வேறு பிரச்னைகள் குறித்தும் இணைக்களம் சம்பந்தமான பிரேரணைகள் குறித்தும் விவாதங்கள் நடைபெறவுள்ளன. (ஈ)

# கேள்வி விளம்பரம்

மானிப்பாய்க் கிராமசபை விசேட ஆணையாளரால் ''சாவல்கட்டு சந்தை கட்டிடம் அமைத்தல் வேலைக்கு'' முத்திரையிடப்பட்ட கேள்விகள் 1978-09-08 திகதி காலை 10-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூபா 100/- கேள்விக் கட்டுப்பணமாகவும் பத்திரக்கிரயமாக ரூபா 10/-ம் செலுத்தி 1978-09-06-ம் திகதி பிற்பகல் 3-00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை இச் சபைக் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

கே. கோபாலரத்தினம்,
விசேட ஆணையாளர்,
மானிப்பாய் கிராமசபை,
ஆனைக்கோட்டை.

மானிப்பாய்க் கிராமசபை,
ஆனைக்கோட்டை,
1978-08-21. 0115

# பஸ்--லொறி மோதல்

(கிளிநொச்சி)

திருமலையிலிருந்து பயணிகளை ஏற்றிவந்த பஸ்வண்டியொன்று கிளிநொச்சி பஸ் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த சமயம் கண்டி வீதியால் ஏருற்றிவந்த லொறியினல் மோதப்பட்டது.

இச் சம்பவத்தினல் பஸ் சாரதி பலத்த காயத்துக்குள்ளாகி, கிளிநொச்சி அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பஸ் வண்டியின் முன் கண்ணடிகள் பலத்த சேதத்துக்குள்ளாகின. பஸ் பிரயாணிகள் காயமின்றி தெய்வாதீனமாகத் தப்பினர்.

மோதலின்போது ஏற்பட்ட பயங்கரச்சத்தத்தினல் பஸ் நிலையத்தில் கூடிநின்ற மக்கள் பயத்தினல் கிலிகொண்டு சிதறி ஓடினர்கள். (இ)

# பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

குப்பிளான், என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கந்தையா என்பவரின் மரணசாதனத்தின் விடயத்தில்
மரணமெய்தியவர்

வேலுப்பிள்ளை கந்தையா கைம்பெண் சிதம்பரம், குப்பிளான், ஏழாலை.
மனுதார்

மரணசாதன
நியாயாதிக்கம்
இல. 418

எதிராக

1. கந்[illegible] அருணகிரி நாதன்
3. கந்தையா இந்திராணி
3. கந்தையா கிருஷ்ண வேணி
4. கந்தையா பரமகுரு நாதன்
5. கந்தையா சரோயா தேவி எல்லோரும் குப்பிளான், ஏழாலை.

2, 3, 4, 5-ம் எதிர்வாதிகள் பராயமடையாதவர்கள். 5-ம் எதிர்வாதி அவர்களின் பாதுகாவலராக நியமிக்கப்பட வேண்டியவர்.
எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட் இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 8-ஆந் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்ருனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்ருர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
பதிவாளர்.

1978-ம் ஆண்டுவைகாசிமாதம் 19-ம் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது.

தயாரித்தவர்:
க. பரமநாதன்.
மனுதாரின் சட்டத்தரணி.
0062

# ஈரான் தியேட்டர் தீவைப்பு! பலியானேர் தொகை 430

டெஹ்ரான், ஆக 21

'ஈரானில் தீ வைக்கப்பட்ட தியேட்டரில் பலியானேர் தொகை 430 ஆக அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக அபடான் நகரிலுள்ள கல்லூரி ஒன்றைச் சேர்ந்த ஆசிரியர்கள் உட்பட பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ)

# கிராம அபிவிருத்திச் சங்கம்

(வண்ணர் பண்ணை)

உடுப்பிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புனரமைப்பு பொதுக் கூட்டம் மேற்படி சங்க முன்றலில்

(5ம் பக்கம் பார்க்க)

# ஆசிரியர் தேவை

யா/வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

தாவரவியல், விலங்கியல் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்குத் தற்காலிக ஆசிரியர்கள் உடனடியாகத் தேவை. பட்டதாரிகளும் பட்டதாரி பரீட்சை எழுதியவர்களும் 01-09-78 வெள்ளிக்கிழமைக்கு முன்பு அதிபருக்கு விண்ணப்பிக்கவும்

ப. ஆறுமுகம்,
அதிபர்.

0116

# கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்-கந்தர்மடம்
பலாலி வீதி,
இந்து மகளிர் கல்லூரி
ஒழுங்கை இல. 10

பொன்னம்பலம் நாகலிங்கம் நடராசா கைம்பெண் கிருஷ்ண குமாரி தாஞகவும் தனது கணவன் காலஞ்சென்ற நாகலிங்கம் நடராசாவின் சொத்துக்கு நிர்வாக தத்துவகாரியாகவும்
வழக்காளி

இல. ஈடு/1309

எதிராக

சுண்டிக்குளி - கச்சேரி,
நல்லூர் வீதி,
பாரதி ஒழுங்கை இல. 6

1. தம்பையா நாகராசாவும்
2. பெண் அன்னலட்சுமியும்

எதிராளிகள்

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டில் ஈடு/1309-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1978-ம் ஆண்டு ஆகஸ்டு (ஆவணி) மாதம் 30-ந் திகதி (30-8-78) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

## தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபாய் 13000/-ம் இதில் ரூபாய் 6500/-க்கு 5-7-76 திகதி தொடக்கம் 22-2-77 திகதி வரைக்கும் 100க்கு 12 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுக்கப்படும் வரைக்கும் 100க்கு 9 வீத வட்டியும், கோட்டுச்செலவு ரூபாய் 755-07 சதமும் இதில் ரூபா 1000/- இறுபட்டது.

## காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டுக்குளி கோவில்பற்று சிவியாதெரு இன ''நெற்றன் தோட்டம்'' நிலைப்பரப்பு 2ம் கல்வீடும், கிணறும், செய்பயிர் வகன்பயிர்களும் எல்லை: கிழக்கு கதிரவேலு பரமநாதனின் உரித்தாளருக்கும் வேலுப்பிள்ளை கைம்பெண் செல்லாச்சிக்குமுரிய ஆதனங்கள், வடக்கு ஒழுங்கை, மேற்கு பரஞ்சோதி பெண் கமலாம்பிகைக்குரிய ஆதனம், தெற்கு கணபதியார் சின்னத்தம்பிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள் இதடங்கலும்.
முற்பதிவு D 282/245.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

தெல்லிப்பழை,
30-6-1978. 0110

# கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக்கோடு

1. குமாரவேலு கந்தையாபிள்ளையும்,
2. மனைவி சுந்தரமும், காரைநகர்.

வழக்காளிகள்

ஈடு / 14593

எதிராக

நீக்கிலாப்பிள்ளை சவிரிமுத்து டேவிட்,
மாட்டின் ரேட், யாழ்ப்பாணம்.

எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் ஈடு/14593ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் ஆதனம் 1973ம் ஆண்டு புரட்டாதி மாதம் 8ந் திகதி (8-9-78) வெள்ளிக்கிழமை காலை 9-30 மணியளவில் அக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் என்னல் விற்கப்படும்.

## தீர்வைத்தொகை

முதலும் வட்டியுமாக 27435/-ரூபா. மேலும் 20,000/- ரூபாவிற்கு 18-9-1974—8-5-1975 வரைக்கும் நூற்றிற்கு 10% பத்துவீத வட்டியுங் கூட்டிக் கூட்டிய தொகைக்கு 8-5-1975தொடக்கம் முழுப்பணம் இறுக்கும்வரைக்கும்5%வீத வட்டியும் கோட்டுச்செலவு 676-62 சதமும் (ஏற்பட்டசெலவு 406-30, இனிமேலேற்படவேண்டிய செலவு 152-22, சமயாசமயச்செலவு 113-10) 25-8-76ல் கட்டிய 3000/- 1-9-77ல் 5500/-, 19-10-77ல் 4,000/ம், 3-12-77ல் 800/ம், 28-3-78ல் 4,500/- (கட்டிய ரூபா 25,000/-) போக மிகுதி.

## ஆதன டாப்பு

வடமாகாணம், யாழ்ப்பாணமாவட்டமும் பகுதியும், கரையூர் சுண்டிக்குளியிறை ''செட்டியன்குளம்'' நில. பர. 1குளி 11 15/16 ம் வீடும், கிணறும், மலசல கூடம், வான்பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கும் வடக்கும் காலஞ்சென்ற யோசேப்பு சவரிமுத்து புவிமானசிங்கமும், சகோதரரின் உரிமைக்காரரின் ஆதனமும், மேற்கு ரேட்டு, தெற்கு சைமன் பொன்னுத்துரையும் மனைவி அன்னம்மாவினுதனமும் இதடங்கலும். இவ்வாதனம் 1967ம் ஆண்டு மாசி மாதம் 5ந் திகதியில் திரு. தி. கந்தையா, நிலஅளவையாளரால் 3363ம் இலக்கப் படத்தில் நில. பர. 1 குளி 12½ உடைய அளக்கப்பட்டுள்ள படம். டு 332/203.

தா. க. பொன்னுத்துரை ஜே. பி.
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

''அகிலகம்'',
28/1, யாழ். வீதி,
யாழ்ப்பாணம்.
25-7-78. 0109

# கேள்வி பற்றிய அறிவித்தல்

## விசேட ஆணையாளர் அலுவலகம்,

### வல்வெட்டித்துறை நகரம்,

வல்வெட்டித்துறை.

வல்வெட்டித்துறை நகர விசேட ஆணையாளரால் கீழ் வரும் வேலைகளுக்கு ரூபா 25,000/ க்கு மேல் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துகாரர்களிடமிருந்து 1978-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 6-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை சீல் வைத்த கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் நகரசபைக் கந்தோரில் அதன் பொருட்டு வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் போடுதல் வேண்டும் அல்லது விசேட ஆணையாளரின் விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப்பத்திரப்பணம் கீழே விதித்தபடி செலுத்திய பின் விசேட ஆணையாளரால் வழங்கப்படும் பத்திரத்தில் நிரப்பிக் கொடுக்கப்படுதல் வேண்டும். பத்திரப் பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. கேள்விப்பத்திரம் 1978-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 4-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை வழங்கப்படும்.

எக்கேள்வியையும் நிராகரிக்கவோ ஏற்றுக்கொள்ளவோ விசேட ஆணையாளருக்கு அதிகாரமுண்டு.

மேற்கொண்டு விபரங்களை காரியாலய நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

| | வேலையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் | கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|---|
| | .............. | ............ | ............ |
| 1. | ஆதி கோவிலடி கடற்கரை வீதி அமைத்தல் | 250-00 | 25-00 |
| 2. | சிவபுர வீதி அமைத்தல் | 150-00 | 15-00 |

கு. இராஜநாதன்,
விசேட ஆணையாளருக்காக,
வல்வெட்டித்துறை நகரம்,
வல்வெட்டித்துறை.

விசேட ஆணையாளர்
அலுவலகம்,
வல்வெட்டித்துறை நகரம்,
வல்வெட்டித்துறை,
21-08-1978. 0119

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

ஈழநாடு
The Eelanaadu

## நாடற்றவர்கள்

இந்த நாட்டில் நிரந்தரமாகவும் சட்டபூர்வமாகவும் வசித்துவரும் நாடற்றவர்கள், புதிய அரசியலமைப்புச் சட்டம் அமுலுக்கு வந்த பின்னர் வெளிநாடு சென்று திரும்ப வாய்ப்பு ஏற்படும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் மஸ்கெலியா-நுவரெலியாத் தொகுதி மூன்றுவது உறுப்பினருமான திரு. எஸ். தொண்டமான் ஒரு பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

நாடற்றவர்களுக்காகப் பிரத்தியேகப் பிரயாணப் பத்திரங்கள் வழங்கப்படுமென்றும் அவர் தெரிவித்திருக்கிறார். இலங்கையருக்குள்ள சகல அடிப்படை உரிமைகளும் பத்து ஆண்டு காலத்துக்கு நாடற்றவர்களுக்கும் நீடிக்கப்படும் என்ற திருத்தம் தேசிய அரசுப் பேரவையில் அரசியலமைப்புத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருப்பதால் இந்தச் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதென்றும் திரு. தொண்டமான் விளக்கம் கொடுத்திருக்கிறார்.

நாடற்றவனும் தாயகம் சென்று திரும்பும் வாய்ப்பு ஏற்பட்டுவிட்டால் சட்டவிரோதக் குடியேற்றம் என்ற பிரச்னையும் நீங்கிவிடும். சட்ட விரோதமாகக் குடியேறுபவர்கள் புதிதாக இந்தியாவிலிருந்து இங்குவருபவர்களல்லர் என்பது பலரும் அறிந்த உண்மை

முன்னர் நாடு கடத்தப்பட்டவர்களே இங்கு சட்ட விரோதமாக வருகிறார்கள் என்று பலரும் தெரிவித்திருக்கிறார்கள். இந்நாட்டின்பிரஜையான பெண்ணை மணந்து குடும்பமாகஇருந்து பிள்ளைகளைப் பெற்று வாழ்ந்தவர்களும்கூட இலங்கைப் பிரஜாவுரிமைபெற முடியாதபடி சட்டமிருக்கிறது. இந்த நாட்டின் ஆணை மணந்த பெண்ணுக்குப் பிரஜாவுரிமை கிடைக்கும்; இந்த நாட்டுப் பெண்ணை மணந்த ஆணுக்குப் பிரஜாவுரிமைபெறமுடியாது. இதனால் பல ஆண்கள் 'கள்ளத் தோணிகள்' என்று நள்ளிரவிலும்கூடக் கைதுசெய்யப்பட்டுத் தடுப்பு முகாமில் அவஸ்தைப்பட்டு நாடுகடத்தப்பட்டனர். இவர்களே தங்கள் மனைவி மக்களைப் பார்ப்பதற்காகச் சட்ட விரோதமாக வருகிறார்கள்.

இப்படிப் பிரிந்த குடும்பங்கள் தான் கச்சதீவுத் திருநாள் காலத்திலும் இணைந்து மகிழ்கின்றன.

நாடற்றவர்களுக்கும் தாயகம் சென்றுதிரும்பவசதி ஏற்பட்டுவிட்டால் இந்தப் பிரச்னை வெகுவாகக் குறைந்துவிடும். இது தவிர இலங்கைப் பெண்களை மணந்தவர்களுக்கும் பிரஜா உரிமை வழங்கக்கூடிய முறையில் பிரஜாவுரிமைச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவருவதற்கும் திரு. தொண்டமான் முயற்சி செய்து வெற்றிகண்டால் மேலும் பல பிரச்னைகள் தீர்ந்துவிடும்.

அரசியலமைப்புத் தெரிவுக்குழுவில் திரு. தொண்டமான் அங்கம் வகித்ததன் மூலம் புதிய அரசியலமைப்பில் வம்சாவழிப் பிரஜை-பதிவுப் பிரஜை என்றவேறுபாடு நீக்கப்பட்டுவிட்டது. மலையக மக்களைப் பொறுத்தவரையில் புதிய அரசியலமைப்பு பலவிதத்திலும் பயனளித்துள்ளது. ஆனால் இவை எழுத்தில் மட்டுமில்லாது செயல்படுவதிலும் திரு. தொண்டமான் விழிப்பாக இருப்பாரென்று நம்பலாம்.

## பொல்லா வினைகள் அறுப்பாய்!



எனையாள் பவனே
குருவே சரணம்
உனைவேண் டிடவே
அருள் சண்முகனே.

நல்லைப் பதி வாழ்
செல்வா முருகா
பொல்லா வினைகள்
அறுப்பாய் குகனே.

குருவின் குருவே
குரூபூ பதியே
இடரைப் பொடிசெய்
சுடர்வே லவனே.

--சி. சதாசிவம்.

## இந்து மாணவர் மன்றம்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை இலந்தைகட்டிபாதாள ஞானவைரவர் கோயில் இந்து சமய மாணவர் மன்ற நிகழ்ச்சிகள் மட்டக்களப்பு தெய்வநெறிக் கழகத் தலைவர் ஸ்ரீமத் ஓங்காரானந்த சுவாமிகள் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

கிளிநொச்சி குருகுல அதிபர் திரு. வே. கதிரவேலு, வவனியா இந்து இளைஞர் மன்றத் தலைவர் திரு த. நல்லதம்பி ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றுவர்.

மேற்படி ஆலய பிரதான குருக்களுக்கு பொன்னுடை போர்த்தி பொன்முடிப்பு வழங்கப்படவிருக்கிறது. மாணவர்களுக்கிடையே பேச்சுப் போட்டிகள் நிகழும். (ஈ)

## கூட்டுறவு தினவிழா

(உருத்திரபுரம்)

பரந்தன் மாவட்ட தேசிய கூட்டுறவுச்சபை நடத்தும் கூட்டுறவுதினவிழா எதிர்வரும் 30ந் திகதி கிளிநொச்சி றெட்றிக்கோ மைதானத்தில் நடைபெறவுள்ளது,

இவ்விழாவின் விசேஷநிகழ்ச்சிகளாக சங்க அங்கத்தவர்களுக்கான 20மைல் ஆண்கள் பங்கு பற்றும் சைக்கிள்ஓட்டப் போட்டி, 5 மைல் பெண்கள் சைக்கிள் ஓட்டப்போட்டியும் கூட்டுறவுப் பணியாளர்களுக்கிடையே கட்டுரைப்போட்டியும், கயிறிழுத்தல்போட்டியும் நடைபெறவுள்ளன. பரந்தன் மாவட்டத்திலுள்ளநாடகமன்றங்களுக்கிடையேயான சரித்திர நாடகப்போட்டியும்இடம் பெறவுள்ளன.

மேற்படி போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் முடிவு திகதி 23ந்திகதி புதன்கிழமையாகும்.

பரந்தன் மாவட்ட தேசியக் கூட்டுறவுச்சபையின் எல்லைக்குள் அடங்கும் துணுக்காய், பரந்தன், பூநகரி, கிளிநொச்சி, பளை ஆகிய பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களுக்கான சிறந்த கிளை தெரிவுப்போட்டியும் இவ் விழாவில் பிரதான நிகழ்ச்சியாக இடம்பெறுகின்றன. (உ)

## மணிவிளக்கு

பெரிய மனிதர்களைப் புகழ்தலானது அநேகமாக நாமும் அவர்களைப்போல் நடக்கவேண்டுமென்ற ஆவலை உண்டாக்குகிறது.

— ஆர்ச்வார்ட்.

'சிரமதானம் மூலம்

## அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்''

(மட்டக்களப்பு)

''கிராமமட்டத்திலான சமூக, பொருளாதார நடவடிக்கைகளுக்கு, கிராம முன்னேற்றச்சங்கங்கள் சிரமதான மூலம் மனித சக்தியை அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பயன்படுத்துதல்வேண்டும்''

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக பதவியேற்றுள்ள திரு. டிக்சன் நிலவீர, கரையாக்கன் தீவில் செக்கரியா குளம் புனர்நிர்மாண வேலையை சம்பிரதாயபூர்வமாக சிரமதான மூலம் தொடக்கிவைத்துப் பேசுகையில் வேண்டுகோள் விடுத்தார்,

மேற்படி சிரமதான வேலை வவுணதீவு உதவிஅரசாங்க அதிபர் திரு. எஸ் சொர்ண வடிவேல் தலைமையில் நடைபெற்றது இவ் வேலைத் திட்டத்தை கிராமஅபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. க. சுப்பையாபிள்ளை கி. மு. சங்கத்தின் ஆதரவுடன் ஏற்பாடு செய்திருந்தார்.

திரு. டிக்சன் நிலவீர மேலும் பேசுகையில் கூறியதாவது:

''கிராமஅபிவிருத்திச் சங்கங்கள் அரசாங்கத்தை முழுமையாகநம்பியிருக்கக்கூடாது. சிரமதான அடிப்படையில் சுய அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபடுவதற்கு முன்வரல்வேண்டும். படுவான்கரை, கால்நடை, விவசாயம் போன்ற அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிலைக்களனுக அமைந்துள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

''மழைநீரை மட்டும் நம்பி, நமது கிராமிய பொருளாதாரத்தை மந்தமடையச் செய்யக்கூடாது. மழைநீரைத் தேக்கி கால்நடைகளுக்கும் பொதுமக்களுக்கும் தண்ணீர்த் தேவையை ஓரளவு நிவர்த்தி செய்யலாம். மனித ச்க்தியையும் விவசாயத்தின் பின்னர் கிடைக்கும் ஓய்வையும் பயன்படுத்தி பயிர்செய்கைமூலமும், உள்ளூர் மூலப்பொருட்களைக் கொண்டும் கிராமிய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிட்டு செயலாற்றவேண்டும்.''

மேற்படி வைபவத்தில் மட்டக்களப்பு மாவட்ட தலைமையக உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். தர்மகுலங்கம், கிராமோதய அமைப்பாளர் திரு. ச. இரத்தினசிங்கம் உட்பட பகுதி கிராமசேவையாளர்கள், பயிர்ச்செய்கைக் குழு உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர். (ஈ)

## ''மனிதசக்தி இல்லையேல் வாழ்வு இல்லை''

(புங்குடுதீவு)

''மாநிலம் பயனுற வாழ்வதற்கு நம்முடைய சக்திகளை நாம் பயன்படுத்தவேண்டும். சக்தியை உணர்வதும், சேகரிப்பதும் செலவழிப்பதும் ஒரு வாழ்க்கை முறையாகவேண்டும். சக்திஇல்லையேல் சிவம் இல்லை, மனிதசக்தி இல்லையேல் சிறந்த வாழ்வும் இல்லை''.

புங்குடுதீவு ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஆலயத்தில் சிறப்புரையாற்றிய புலவர் ஈழத்துச் சிவானந்தன் மேற்கண்டவாறு கூறினார். திரு, ந. குலேந்திரன் தலைமையில் நடந்த இந்நிகழ்ச்சியில் புலவர் சிவானந்தன் மேலும் கூறியதாவது:-

''சக்தி வழிபாட்டினால் நம்முடைய ஞானவிருத்தியைப் பெருக்கிக் கொள்ளவேண்டும். நமக்கிருக்கின்ற விருப்பச்சக்தியை, நடைமுறைச் சக்தியை அறிவுச்சக்தியால் ஆற்றுப்படுத்தல் வேண்டும். இல்லையேல் வெறும் விருப்பங்களும் விவேகமற்ற செயல்முறைகளும் பல தீங்குகளை உருவாக்கிவிட்டுவிடும் நன்மை செய்வதாக நினைத்துக் கொண்டு கெடுதலைச் செய்கின்ற முயற்சிகள் விரும்பத்தக்கதல்ல. நமது சமயச்சான்றோர்கள் கண்டுபிடித்துக்காட்டிய இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி ஆகிய மூன்றையும் தேவியின் கிருபைகளோடு வழிப்படுத்தவேண்டும்.''

(5-ம் பக்கம் பார்க்க)

## புனித ரமலானில் புனிதப் போர்

புனித ரமலான் மாதம் இஸ்லாம் மார்க்கத்திலும் அதன் சரித்திரத்திலும் பெரும் முக்கியத்துவம் நிறைந்தது. சத்தியத்திற்கும், ஏகத்துவத்திற்கும், ஈமானின் உறுதிக்கும், இஸ்லாத்தின் எழுச்சிக்கும் விடப்பட்ட சவாலை முறியடிக்கச் செய்து வெற்றி அளித்த மாதம் இதுவே.

ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு ரமலான் பிறை பதினேழில் (கி. பி. 624-மார்ச்-பதின்மூன்றந் திகதி) அபூஜஹில் என்பானுடைய தலைமையின்கீழ் வந்த குறைஷியர் படைகளுக்கும், பெருமானார் (ஸல்) அவர்களின் தலைமையில் வந்த முஸ்லிம்களின் படைகளுக்கும் மக்காவுக்கும் மதீனாவுக்குமிடையில் உள்ள பத்ரு என்ற இடத்தில் போர் மூண்டது. குறைஷிகளின் படையில் பலமான ஆயுதங்களுடன் ஆயிரம் பேரும் முஸ்லிம்களில் சுமார் முந்நூற்றுப் பதின் மூவருமே. இருந்தனர் போர் ஆரம்பமானது முஸ்லிம்களில் பதினன்கு பேர் ஷஹீத் ஆனார்கள். குறைஷிகளின்தலைவனுக இருந்த அபூஜஹல் உட்பட எழுபது பேர் மாண்டனர். எழுபது பேர் சிறைப்பிடிக்கப்பட்டனர். ஏனையோர் ஓடிவிட்டனர்.

இப்போரில் கலந்து கொண்ட 'முஸ்லிம்களைச் சொர்க்க வாசிகள் என்று நிச்சயமாகக் குறிப்பிடப்பட்டது. திருகுர்ஆனில் பத்ர் போர் சம்பந்தமாய் 'அன்பால்' என்னும் அத்தியாயம் அருளப்பட்டது.

இப்போர் இஸ்லாத்தின் எழுச்சிக்கு அத்திவாரமாக அமைந்தது. மனதில் உறுதியான நம்பிக்கை-வாழ்விலே நற்கிரியைகள் ஒழுங்கும் கட்டுப்பாடும் ஆதியன மனிதனிடத்தில் ஏற்படுமாயின் வெற்றி நிச்சயம் என இப்போர் உறுதி கூறுகிறது

தொகுப்பு: ஏ. ஸி. எம். மஸ்ஹூர் - யாழ்நகர்.

## இன்றைய இராசிப்பலன்

ஆவணி மாதம் 7-ந் திகதி
புதன்கிழமை
(23-8-78)

**மேடம்:-** வாழ்க்கை புதிர் நிறைந்ததாக இருக்கும், எடுத்தகாரியம் இறுதி நிமிடத்தில் ஏமாற்றத்தை அளிக்கும், நல்லதைச் செய்யினும் வீண்பழி கேட்க நேரிடும், வெளியிடத்துக் கடிதம் வேதனையைத் தரலாம், திடசித்தம் வேண்டும்.

**இடபம்:-** இனிக்கப்பேசி காரியங்களைச் சிறப்பாகசெய்து முடிப்பீர்கள், மேடைப் பேச்சாளர்கள் பெரும் புகழ் அடைவர், ஆதாயத்திலும் அபிவிருத்தி தென்படும், அரசியலாளரின் கவனமும் உங்கள் பக்கம் திரும்பும்.

**மிதுனம்:-** குறுக்கு வழியில் இறங்குவதற்கு எண்ணம் தோன்றக் கூடும், ஆத்திரப்படுவதால் விபரீத விளைவுகள் ஏற்படும், தடைகள் பலவுண்டு, அவசர முடிவைத் தவிர்க்கவும்.

**கடகம்:-** நினைத்த காரியத்தில் வெற்றியுண்டு, எதிர்பாராதவகையில் உங்களுக்கு ஆதரவு பெருகும், பகைத்தவர்களே உங்களை பாராட்டச் செய்வார்கள், பண விவகாரத்தில் நல்ல திருப்பம் ஏற்படும், சிறப்பான தினம்.

**சிங்கம்:-** காரியம் யாவிலும் கைகொடுத்து உதவுவதற்கு ஒருவர் முன்வருவார், உங்கள் சீரிய நோக்கம் எங்கும் சிறப்பைத் தேடித்தரும், இல்லம் இன்று கட்டி வெல்லம்.

**கன்னி:-** உங்கள் நடவடிக்கைகள் அனைத்தும் இன்று வேவு பார்க்கப்படும், தொழில்துறையில் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு சதி நடைபெறலாம், அகால போசனத்தின் மூலம் வயிற்றுக்கோளாறு ஏற்படமுடியும்.

**துலாம்:-** களஸ்திர வழியால் கனிவான சம்பவங்களுக்கு இடமுண்டு, வாழ்வுப் பயணத்தில் வளமான திருப்பம் உருவாகும், இணைந்த இதயங்கள் இன்பத்தில் மிதக்கும், பொருள் வரவிலும் திருப்திகரமான நிலை தென்படும்.

**விருச்சிகம்:-** முன்னேற்றத்தில் முட்டுக்கட்டை தோன்றும், கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள், சிலர் வாழ்க்கையில் கடன்படவும் நேரிடலாம், நண்பர்களாலும் நஷ்டமடைவதற்கிடமுண்டு.

**தனுசு:-** பரோபகார சிந்தை மேலிடும், பொதுப் பணி புரிவதில் ஆர்வம் பிறக்கும், மதத்தலைவர் ஒருவர் நல்லாசி வழங்குவார், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையினல் நல்ல பெயரும் கிடைக்கும்.

**மகரம்:-** புதிய கண்டுபிடிப்புக்களில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், விஞ்ஞானத்துறையில் ஈடுபாடுடையவர்கள் பாராட்டப்படுவார்கள், தொழில் புரியும் இடத்தில் உயர்ந்த அந்தஸ்தும் கிடைக்கும்.

**கும்பம்:-** நீண்ட நாள் கொடுத்தகடன் மீண்டும் வந்து சேரலாம், பிறந்த இடத்தின் பெருமை நிலைநாட்டப்படும், புத்திரர்களாலும் புகழ் கிடைக்கும்.

**மீனம்:-** எண்ணத்தின் தாக்குதல்கள் நெஞ்சத்தைப் புண்ணுக்கும், அற்பவிடயத்திற்குக்கூட பொல்லாங்கு கேட்க நேரிடும், தனிவழியில் நாட்டம் செலுத்துவீர்கள், சீறிவரும் கோபத்தை அடக்கவும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# ஹிந்தி திணிப்பை எதிர்த்து தமிழகம் முழுவதும் இயக்கம்

## லட்சம் பேர் சிறைசெல்லவும் தயார் என்கிறார் கருணாநிதி

(தமிழகத்திலிருந்து அந்தனி ஜீவா)

சென்னை, ஆக. 22

ஹிந்தியை எதிர்த்து லட்சம் பேர் சிறை செல்வோம் என்று தி. மு. கழகத்தலைவர் திரு. மு. கருணாநிதி கூறினார். தமிழ் நாட்டுக்கு வரும் மத்திய அமைச்சர்களுக்கு கறுப்புக்கொடி காட்டப்படும் என்று கூறிய கருணாநிதி இந்தியாவின் தலைநகரை மாற்றவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

திராவிடர் கழகம் இந்தி எதிர்ப்புமாநாட்டை சென்னை பெரியார்திடலில் நடத்தியது. இதில் கலந்துகொண்டு தி. மு. கழகத்தலைவர் கருணாநிதி பேசியபோது மேலும் கூறியதாவது;

ஹிந்தியைத் திணிக்கமாட்டோம் என்று நேருவிலிருந்து எல்லாப் பிரதமர்களும் உறுதி மொழி கொடுத்தார்கள். ஆனால் அவை காற்றிலேபறக்க விடப்பட்டு ஹிந்தி பரப்புவது மிகவேகமாக நடந்துவருகிறது.

சென்னை ரயில் வண்டி தொடக்கவிழா நடந்தது. எனக்கு அழைப்பிதழ் அனுப்பி இருந்தார்கள். ஒரு பக்கம் ஹிந்தியிலும் ஒரு பக்கம் ஆங்கிலத்திலும் அழைப்பிதழ் அச்சிடப்பட்டிருந்தது

இந்த விழாவிற்கு தமிழக கவர்னர் தலைமை தாங்கினார். அழைப்பிதழில் தமிழேஇல்லை. ஆங்கிலத்திலும் தமிழிலும்அச்சிட்டிருக்கலாமே.

அந்த ரயில் எவ்வளவு வேகமாகப் போகவேண்டுமென்று கூறுகிறார்களோ அதைவிட வேகமாக ஹிந்தியைப் பரப்புகிறார்கள். இவ்வளவு வேகம் இருந்தால்தண்டவாளம்என்ன ஆவது?

இந்தியா பலமொழி பேசும் மக்களைக்கொண்ட நாடு. தமிழ் பேசுகிற நமக்கு நம் குடும்ப மொழி பேசும்பகுதி திராவிடமென்றாகிறது. நாம்திராவிடர்கள், நாட்டால் இந்தியர்கள்.

### நமது நிபந்தனை

பதினான்கு மொழிகளையும் ஆட்சிமொழியாக்கும முடிவை நாம் வரவேற்கிறோம். அதுவரை ஆங்கிலம் தொடர்பு மொழியாக இருக்கட்டும் ஹிந்தி வேண்டாம். ஹிந்தி வேர் விடுமானால் இந்தியக் கோபுரம் தகர்ந்துவிடும்.

-1938 லேயே ஹிந்தி எதிர்ப்புக் கனல் உருவாக்கப்பட்டது. நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஆயிரம் பேர் சிறை சென்றார்கள் என்றால் இப்போது ஹிந்தி எதிர்ப்புப் போர் வந்தால் சிறை செல்ல எத்தனை பேர் வருவார்கள் என்பதை நினைத்துப் பார்க்கவேண்டும். நாங்கள் போரில் இறங்கினால் லட்சம்பேர்சிறைக்குச்செல்லத் தயாராக இருக்கிறார்கள்.

எந்த வகையில் வந்தாலும் தமிழகத்தில் ஹிந்திபரவுவதை தடுத்து நிறுத்தினால்தான்வருங் காலச்சந்ததி காப்பாற்றப்படும். பின்வரும் சந்ததியினருக்கு வழிகாட்டும் மாநாடாகத்தான் இந்த ஹிந்திஎதிர்ப்பு மாநாடு அமைந்துள்ளது.

என்னைப் பொறுத்தவரை எனது பொது வாழ்வு நுழைவே ஹிந்திய போர்தான் ஹிந்தி எதிர்ப்பு என்பது என் ரத்தத்தில் ஊறிப் போனது. நான் இல்லாமல் தி. மு. கழகம் இல்லால் இந்தி எதிர்ப்பு இல்லை.

செப்டம்பர் 10-ம் திகதி தமிழகம் முழுவதும் ஹிந்தி எதிர்ப்புக் கூட்டங்கள் நடத்தப்படும். அப்போதும் ஹிந்தி திணிப்பை நீக்க மத்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால் தமிழகம் வரும் மத்திய மந்திரிகளுக்கு கறுப்புக் கொடிகாட்டப்படும்,

மொழிப் பிரச்சினையை அடியோடு தீர்க்க தாய் மொழியும் ஆங்கிலமும் என்ற இரு மொழித் திட்டம்தான் சிறந்தது.

ஆங்கிலம் எப்போதும் வேண்டும். ஹிந்தி என்றுமே வேண்டாம்.

இந்திய தலைநகரம் டெல்லியில் இருக்கும்வரை இந்தி திணிப்பு ஓயப்போவதில்லை. இந்தியத் தலைநகரத்தை ஐதராபாத் போன்ற தென் மாநில நகருக்கு மாற்ற வேண்டும். (வெ.நி. - இ)

### வழிப்பறி

(வவனியா)

பூவரசன்குளத்தில், கொள்ளையர்கள் சிலரின் அட்டகாசத்தால் அவ்வழியால் செல்லும் பிரயாணிகள் அச்சமடைந்துள்ளனராம். இரவு நேரங்களில் பூவரசன்குளத்தில் பஸ்கள் நிறுத்தப்பட்டு புறப்படும்போது ஜன்னல் ஓரங்களில் இருப்பவர்களது கைக்கடிகாரங்கள், பேனாக்கள், தொப்பிகள், சிறிய பயணப்பைகள் ஆகியவற்றை மின்னல் வேகத்தில் பறித்துக் கொண்டு இக்கொள்ளையர்கள் ஓடிவிடுகிறார்களாம் சமீபத்தில் மடுஉற்சவத்திற்கு சென்று திரும்பிய பலர் தமது பொருட்களை இவர்களிடம் பறி கொடுத்தனர். குறிப்பாக இந்தியா சென்று தலைமன்னார் வழியாக யாழ்ப்பாணம் செல்லும் பிரயாணிகள் இவர்களால் பாதிக்கப்படுகிறார்கள்.

இதுபற்றி இந்தியா சென்று திரும்பிய ஓர் ஆசிரியர் குறிப்பிடுகையில், தனது கைக்கடிகாரத்தை காப்பாற்றிக் கொண்டதாகவும், தலையில் அணிந்திருந்த தொப்பியை பறிகொடுத்ததாகவும் கூறினார். (உ)

# "சைவத்திருமுறைகளை பக்தியுடன் பாடவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

"எமது வாழ்க்கையில், எம்மை ஈடேற்றுவது இறை வழிபாடு. இசைபாடி இறை வழிபாடாற்றுவது மிகவும் சிறந்ததொரு வழியாகும். சைவத்திருமுறைகளைச் சைவ சமயிகளாகிய ஒவ்வொருவரும் பக்தியுடன்பாடிப் பரமனை வழிபாடாற்றவேண்டும். பண்ணிசைப் பெரும்பணி புரிகின்ற, பண்ணிசைப் புலவர், திருஞானசம்பந்தன் செய்து வரும் பண்ணிசைப்பணி பாராட்டத்தக்க தொன்றாகும்"

இவ்வாறு மலேஷியா நாட்டுக்குச் சென்று, பண்ணிசைக் கச்சேரிகள் நடாத்திப் பாராட்டுக்கள் பெற்றுத்திரும்பிய, பண்ணிசைச் செல்வன் திரு. எஸ். ஆர். திருஞானசம்பந்தனுக்கு மீசாலை பக்தி நெறிக் கழகத்தினர், மீசாலை சப்பச்சி மாவடி விநாயகர் ஆலயத்தில் கூட்டுப் பிரார்த்தனைச் சபையின் ஆதரவில் நடாத்திய, பாராட்டு விழாவின்போது, தலைமை வகித்துரையாற்றிய, கல்வயல் சங்கீதபூஷணம் ஸ்ரீ எஸ். விநாசித்தம்பி குறிப்பிட்டார்.

சைவப்புலவர் திரு. கு. வி. மகாலிங்கத்தின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகிய இப் பாராட்டுவிழாவில், சங்கீதபூஷணம் திரு. அ. கி. ஏரம்பமூர்த்தி பாராட்டிதழ் வாசித்தளித்தார். பண்டிதர் ச. கைலாசபிள்ளை, திரு. இராசரத்தினம் உட்படப் பலர் உரையாற்றினர். திரு. ஞானசம்பந்தனின் பண்ணிசைக் கச்சேரியும் இடம் பெற்றது. (ஈ)

# இந்திய பாராளுமன்றத்தில் ராஜாஜியின் உருவப்படம்

## பிரதமர், ஜனாதிபதி, சபாநாயகர், எதிர்க்கட்சித்தலைவர் அமரருக்கு புகழாரம்

புதுடில்லி, ஆக. 22

"மகாத்மாகாந்தியின் மனச்சாட்சிக்காவலாளராகத் திகழ்ந்தவர் அமரர் ராஜாஜி பாராளுமன்றக் கட்டிடத்தில் இன்று வைக்கப்படும் அன்னாரின் உருவப்படம், எதிர்காலச் சந்ததியினருக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும்"

இவ்வாறு இந்தியப்பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் கூறினார்.

இந்தியப் பாராளுமன்றத்தில் ராஜாஜி நூற்றாண்டு விழாக் கமிட்டியினால் அன்பளிப்புச்செய்யப்பட்ட ராஜாஜியின் உருவப்படத்தை ஜனாதிபதி திரு. சஞ்சீவ ரெட்டி திறந்துவைத்து உரையாற்றினார்.

திரு. சஞ்சீவரெட்டி அங்கு உரைநிகழ்த்துகையில், பொது வாழ்வில் தூய்மையாக வாழ்ந்த அமரர் ராஜாஜி, செல்வச் செருக்குக்கு எதிராகப் போராடிய நேர்மையும் அறிவாற்றலும் மிக்க மாமேதையாவர் என்றார்.

மற்றும் சபாநாயகர் திரு. கெகடே, எதிர்க்கட்சித் தலைவர் திரு. வை. பி. சவான் ஆகியோரும் ராஜாஜியின் பெருமைகளை அவ் வைபவத்தில் எடுத்துரைத்தனர். (இ)

### பீகார் வெள்ளம்: எம். ஜி. ஆர். ரூ. 50 ஆயிரம்

சென்னை, ஆக. 22

பீகார் வெள்ள நிவாரணத்திற்கு தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்., முதல்வர் நிவாரண நிதியிலிருந்து 50 ஆயிரம் ரூபாய் அனுப்பியுள்ளார். (வெள்-நிரு-கு)

### மாஜிஸ்டிரேட் விசாரணை

சென்னை, ஆக. 22

பழனியில் கடந்த 13ம்திகதி பொலிசாரின் தாக்குதலினால் ஒருவர் பலியானது தொடர்பாக மாஜிஸ்டிரேட்விசாரணை நடத்துமாறு தமிழகஅரசு உத்தரவிட்டுள்ளது.

இச்சம்பவத்தை அடுத்து பொதுமக்களுக்கும் பொலிசாருக்குமிடையே மோதல் ற்பட்டதும் இது தொடர்பாக பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும், பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரும் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டது தெரிந்ததே.

இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்த விசேட மந்திரிகள் குழுவொன்றை தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் பழனிக்குஅனுப்பியுள்ளார். (இ)

# ரஷ்ய-- அமெரிக்க போட்டியினால் யுத்த ஆபத்து அதிகரிப்பு

## பெல்கிரேட்டில் சீனத்தலைவர் கருத்து

பெல்கிரேட், ஆக. 22

**அணிசேரா இயக்கத்தை நசுக்கி அதைச் சீர்குலைக்க சோவியத் யூனியன் முயன்றுவருகிறது.**

இவ்வாறு சீனத்தலைவர் திரு. குவாகுவாபெங் பெல்கிரேட்டில் குற்றம் சாட்டியுள்ளார்.

கிழக்கு ஐரோப்பாவில் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள சீனத்தலைவர் நேற்று ரூமேனியாவிலிருந் யூகோஸ்லாவியா வந்துசேர்ந்த போது அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பெல்கிரேட்டில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின் போது திரு. குவாகுவா பெங், மேலும் பேசுகையில் "அமெரிக்காவுக்கும் சோவியத்யூனியனுக்குமிடையே அதிகரித்து போட்டாபோட்டி காரணமாக உலகில்யுத்த அபாய அறிகுறியும் அதிகரித்து வருகிறது" என்று கூறினார். (இ)

### ஜனதாகட்சி பதவிக்கு வந்தபின் மாநில அரசின் உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன

### ராஜேஸ்வரராவ் குற்றச்சாட்டு

புதுடில்லி, ஆக. 22

ஜனதாகட்டி ஆட்சிக்குவந்த பின்னர் மாநில அரசுகளின் உரிமைகள் பெருமளவில் பறிக்கபபட்டுள்ளன.

இவ்வாறு இந்திய கம்யூனிஸ்ட்கட்சிப் பொதுச்செயலாளர் திரு. ராஜேஸ்வரராவ் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்

இப்போது மத்திய அரசிடம் அதிகாரம் குவிக்கப்பட்டுள்ளது. இது பெரும் ஆபத்தை விளைவிக்குமென்றும் திரு. ராஜேஸ்வரராவ் தெரிவித்துள்ளார். (இ)

### நாடகமாமணி



யாழ். திறந்தவெளி அரங்கில் நடந்த யாழ் மாநகர சபை பெளர்ணமி கலைவிழாவில் யாழ். நாடக கலாமன்ற ஸ்தாபகரும், நிர்வாகஸ்தருமான திரு. கனகையாவின் சேவையைப் பாராட்டி, திரு. வி. பொன்னம்பலம், "நாடக மாமணி" என்ற பட்டத்தைச் சூட்டிக் கௌரவித்தார்

சுண்டிக்குளியைச் சேர்ந்த திரு. கனகையா சுமார் அரை நூற்றாண்டுக்குமேலாக நாடகங்களில் நடித்து நாடக உலகிற்கு பெரும் சேவையாற்றியிருக்கிறார்.

## மனிதசக்தி

(3ம் பக்கத் தொடர்ச்சி)

சிவஸ்ரீ ஸ்ரீனிவாச நாகேந்திரக்குருக்கள் பேசுகையில், அருள் நெறிப்பற்றுமிக்க இளைஞர்களினலேயே சைவசமயம் இன்று காப்பாற்றப்படுகிறது. சமூகக்குறைபாடுகளை நீக்க முயலும் இளைஞர்கள் சக்தி தேவியின் கடாட்சத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும். இதற்குரிய பயன்மிகுபோதனைகளைபரப்புகின்றசைவஇளைஞர்களை நமது சமயம் பெற்றிருப்பது திருவருளின் பெருங்கருணையென்றே கருதவேண்டியுள்ளது'' என்றார். (ஈ)


வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சிவகுமார் - பிரமிளா
அரங்கேற்றம்

நாகம்ஸ்
(சுன்னகம்)
தினசரி 6-45, 10-00
சிவகுமார் - சுஜாதா
அன்னக்கிளி


நல்லூர்

## பஜனைப் பாதயாத்திரை

(யாழ்ப்பாணம்)

ஏழாலை இலந்தை கட்டி பாதாள ஞானவைரவர் கோவிலிலிருந்து நல்லூர்த் தேர்ப்பஜனைப் பாதயாத்திரை வருகிற 31ம் திகதி இரவு 2 மணிக்கு ஆரம்பமாகிறது.

இப்பஜனை யாத்திரை குப்பிழான், வடக்குப் புன்னலைக் கட்டுவன் சந்தி, தெற்குப் புன்னலைக்கட்டுவன்சந்தி, ஊரெழு உரும்பராய், திருநெல்வேலி, கந்தர் மடத்திற் கூடாகச் சென்று அடுத்தநாள் வெள்ளிக்கிழமை காலை நல்லூர் கந்தசுவாமி கோவிலை அடையும்.

இப்பஜனைப் பாதயாத்திரையில் 13 பஜனைக் கோஷ்டிகள் கலந்துகொள்ள விருக்கின்றனர். (ஈ)


Rio Jaffna, Phone: 7697
Daily 4 Shows
30 WINCHESTER
(Western film)

REGAL Jaffna 2nd POPULAR WEEK
Phone: 360
Daily 10-30 a.m., 2-00, 4-30, 7-00,& 9-30p.m. only
Sophia Loren - Burt Lancaster - Richard Harris
in
THE CASSANDRA CROSSING
All passes and Concessions Suspended

வின்ஸர் போன்: 466 தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
முத்துராமன்-சுஜாதா-சோ
சௌகார்ஜானகி-சுந்தரராஜன்
நடித்த
பேரும் புகழும்

ராஜா தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
கமலஹாசன்-ரஜனி-ஆலம்
சுதா-வை.விஜயா
கடைசி வாரம் நடித்த
மன்மத லீலை
(ஈஸ்ட்மன் கலர்)

மனோகரா தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். - சாவித்திரி
வீரப்பா - எம். என். ராஜம் - சந்திரபாபு
நடித்த
ம கா தே வி [புத்தம் புதிய பிரதி]

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞயிறு 4 காட்சிகள்
வளர்பிறை

லிடோ போன்: 7693 தினசரி 4 காட்சிகள்
(யாழ்.ந
தீர்க்க சுமங்கலி

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சரோஜாதேவி - தேவிகா
நடித்த
ஆடிப்பெருக்கு
(புதியபிரதி)

மகத்தான 100வது நாள்
தினசரி 4 காட்சிகள்
ராணி
(யாழ். நகர்)
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)


தமிழ் பிரிவினைவாதிகளுக்கு

# தமிழக அரசு, இயக்கங்கள் ஆயுத-பண உதவிசெய்கின்றன

## சன்சோனிக்கமிஷன்முன் நிஹால் கனகரத்ன

(கொழும்பு)

முன்னாள் நீதிஅமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்காவுக்கும் தமிழர் கூட்டணியினருக்குமிடையே செய்துகொள்ளப் பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே சிறையிலிருந்த தமிழ் இளைஞர்கள் 1977ம் ஆண்டு பெப்ரவரி மாதம் விடுதலை செய்யப் பட்டனர்.

இவ்வாறு சன்சோனி கமிஷன்முன் நேற்று முன்தினம் சாட்சியமளித்த முகாமைத்துவஆலோசகர் திரு. நிஹால் கனகரத்தின கூறினார்.

இலங்கையில் உள்ள தமிழ் பிரிவினைவாதிகளுக்கு தமிழக அரசும் மற்றும் அங்குள்ள சில இயக்கங்களும் பண உதவியும் ஆயுதஉதவியும்செய்துவருகின்றன என்றும் திரு. கனகரத்தின கூறினார்.

அப்போது குறுக்கிட்ட சட்டத்தரணி அண்டர் வூட் மாணிக்கவாசகம் இத்தகவல்கள் எங்கிருந்து எவர் மூலம் கிடைத்தது என்று சாட்சியிடம் கேட்டபோது அவர் அவ் விபரங்களைக்கூற மறுத்துவிட்டார்.

திரு. கனகரத்ன மேலும் கூறியதாவது:

### பண்டா-செல்வா ஒப்பந்தத்துக்கு மக்கள் ஆணைபெறப்படவில்லை

பண்டா-செல்வாஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம் ஆகிய ஒப்பந்தங்கள் மக்கள் ஆணையைப்பெற்று செய்யப் படவில்லை. தனிநபர்களாலேயே இந்த ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன.

ஆனல் 1956ம் ஆண்டு 24 மணி நேரத்தில் சிங்களம் மட்டும் சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்படும் என்று மக்களாணை பெற்ற பின்னரே அச்சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினர் கமிஷனுக்குச் சமர்ப்பித்திருந்த மகஜரில் தமிழர்கள் பொலிஸ்படை, இராணுவப்படை ஆகியவற்றில் விகிதாசார அடிப்படையில்கூட இல்லாமல், குறைந்த அளவிலேயே நியமனங்கள் நடைபெறுகின்றன என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஆனல் டாக்டர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகளாக தமிழர்களே அதிகமாக உள்ளனர்.

### தமிழருக்கு பாரம்பரிய பிரதேசம் இல்லை

தமிழர் கூட்டணியினர் தமிழ்நாட்டைப் பிரித்து திருமலைத் துறைமுகத்தை அபிவிருத்திசெய்து திருக்கோணமலையைத் தலைநகராக்கத் திட்டமிட்டுள்ளனர். வடக்கு கிழக்கு தமது பாரம்பரிய பிரதேசம் என்கின்றனர். ஆனல் அவர்களுக்கு பாரம்பரிய பிரதேசங்கள் கிடையாது என்பதை திட்டவட்டமாகக் கூறுகிறேன்.

### சிங்களம் மட்டும் சட்டத்தை தமிழரசுக்கட்சி ஏற்றது

56ல் சிங்களம் மட்டும் சட்டம் தளர்த்தப்பட்டது. 58ல் தமிழ் மொழி விசேட மசோதா சட்டம் இயற்றப் பட்டது. 1965ல் தமிழரசுக் கட்சியினர் தொண்டமானுடன் சேர்ந்து தேசியஅரசை அமைத்தனர். அப்போதும் சிங்களம் மட்டும் சட்டம் அமுலில் இருந்தது. எனவே தமிழரசுக்கட்சி உட்பட சகல அரசியல் கட்சிகளும் சிங்களம் மட்டும் சட்டத்தை ஏற்றுக் கொண்டது என்றே கூற வேண்டும்.

சட்டத்தரணி திரு. அண்டர்வூட் மாணிக்கவாசகம் சாட்சியைக் குறுக்குவிசாரணை செய்தார்.

சட்: நீர், நீராகவா அல்லது வேறு எவரின் சார்பிலா இங்கு சாட்சியம் அளிக்கிறீர்?

சாட்சி: நான் அறிந்த விஷயங்களை நானகவே கூறுகிறேன்.

சட்: பாதுகாப்பு அமைச்சு அல்லது பொலிசாருடன் உமக்குத் தொடர்புண்டா? உமது சாட்சியம் அவர்களின் விபரங்களுடன் சம்பந்தப் பட்டுள்ளதுபோல் தெரிகிறது.

சாட்சி: இல்லை. அரசுக்கு எதிரான தமிழ்இளைஞர்களின் பெயர்களே எனக்கு முழுவதும் தெரியாது.

சட்: நான்கு பொலிசாரின் கொலைபற்றி கூறியிருந்தீரே, யார் - என்ன காரணத்துக்காகக் கொலைசெய்தனர் எனத் தெரியுமா?- தெரியாது. (ம-இ

தொண்டமானறு

## செல்வச்சந்நிதி ஆலய கலைகலாச்சார மன்றம்

(இமையாணம்)

தொண்டமானறு செல்வச் சந்நிதி கோயில் வருடாந்த உற்சவ நாட்களிலும் மற்றும் விசேஷ தினங்களிலும் சங்கீதம், கதாகாலட்சேபங்கள் போன்ற நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு செல்வச்சந்நிதி கலை கலாச்சார மன்றம்' ஒன்று அமைக்கப்பட்டுள்ளது,

தொண்டமானறு கிராம சேவையாளர் திரு. பொ. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்படி செல்வச்சந்நிதி கலைகலாச்சார மன்றம் அமைக்கப்பட்டது. மன்ற நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் திரு. இ. சிவதாஸ் செயலாளர் திரு. சி. துரைராசா பொருளாளர் து.துரைரத்தினம், 12 பேர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த உற்சவம் செப்டம்பர் மாதம் 2-ம் திகதி ஆரம்பித்து 16-ம் திகதி முடிவடையும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஈ)

## இடமாற்றம்

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாண அரசாங்க செயலகத்தின் திணைக்களகிளைகள் பலவற்றில பிரதம லிகிதராகக் கடமையாற்றி பூநகரி உதவி அரசாங்க அலுவலகத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்று பின் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில பிரதம லிகிதராகக் கடமையாற்றிய திரு. வி. இராசையா இம் மாதம் முதல யாழ். அரசாங்க செயலக இறைவரி பிரிவுக்கு பிரதம லிகிதராக இடமாற்றம் பெற்றுள்ளார். (ஈ)

## சமாதான நீதவான்

(எழுதுமட்டுவாழ்)

சாவகச்சேரி நீதவான் முன்னிலையில் எழுதுமட்டுவாழைச் சேர்ந்த கந்தையா குலசேகரம்பிள்ளை சமாதான நீதவானகச் சத்தியப் பிரமணம் செய்து கொண்டார்.

இவர் மிருசுவில் கிராம சபையின் தலைவராக இருந்து சேவையாற்றியுள்ளார். இப்பொழுது எழுதுமட்டுவாள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரமுகருமாக விளங்குகிறார்.

## கிராம...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு.வே கந்தசாமிதலைமையில் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். குணநாயகம் முன்னிலையில் நடைபெற்றது. பின்வருவோர் புதிய நிர்வாகிகளாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு.வே. கந்தசாமி (பிரதம லிகிதர், கச்சேரி) யாழ்ப்பாணம், உப தலைவர்: திரு. த. செல்வத்துரை (சட்டத்தரணி), செயலாளர்: திரு. சி. மனோகரன் (சட்டத்தரணி) உப செயலாளர்: திரு. க. பகவத்சிங்கம், பொருளாளர்: திரு. பொ. வேலுப்பிள்ளை (கிராம சேவையாளர்).

திரு. ஆர். பி. தர்மரத்தினம் (சட்டத்தரணி), திரு வே. செல்வரத்தினம், (பிராந்திய மின் பொறியியலாளர்) ஆகியோர் போஷகர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டனர் 10 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். (ஈ)

## 'பிரபந்தத்திரட்டு' வெளியீடு

(சுழிபுரம்)

சைவப்பெரியார் சிவபாத சுந்தரனார் நூற்றாண்டுவிழா சபையார் 'சிவபாதசுந்தரம் பிரபந்தத்திரட்டு' என்னும் நூலை இரண்டாவது நூல் வரிசையில் வெளியிட்டுள்ளனர். பண்டிதை ச. அமிர்தாம்பிகையினல் தொகுக்கப் பெற்ற இந் நூல் வெளியீடு சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரியில் நடைபெற்றது. நூலை யாழ்ப்பாண பல்கலைக் கழக பேராசிரியர் க. கைலாயநாதக் குருக்கள் வெளியிட்டு வைத்தார். சட்டத்தரணி எஸ். சங்கரப்பிள்ளை முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார். (ஈ)

## போட்டி

]உருத்திரபுரம்]

கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் நடாத்தும் லீக் முறை உதைபந்தாட்ட அரை இறுதிப்போட்டி இன்று கிளிநொச்சி \ றெட்றிக்கோ மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இப்போட்டியில் முதல்நாள் கிளிநொச்சி அருணேதயா விளையாட்டுக் கழகமும் இளம் பறவைகள் கழகமும் அடுத்த நாள் பரந்தன் இரசாயன விளையாட்டுக் கழகமும் கிளிநொச்சி விவசாயப் பாடசாலையும் பங்கு பற்றுகின்றன. மேற்படி உதைபந்தாட்ட லீக் கடந்த ஒரு மாத காலமாக நாடாத்தி வந்த இப் போட்டியில் கிளிநொச்சித் தொகுதியைச் சேர்ந்த எட்டு விளையாட்டுக் கழகங்கள் பங்கு பற்றின. [உ]

மண் பறிபோவதாக

# '20 ஆண்டுகளுக்கு முன்பே குரல்கொடுத்தார் நாகநாதன்

## நினைவுவிழாவில் கூட்டணித் தலைவர்

(யாழ்ப்பாணம்)

''அமரர் நாகநாதன், பேரவையில் பல தடவைகள் அஞ்சா நெஞ்சுடன், பல அமைச்சர்களுடன் மோதி, தான் நினைத்த காரியத்தைச் சாதித்ததை நான் பலதடவைகள் கண்டிருக்கிறேன். அன்னாரைப் போலவுள்ள வீரபுருஷர்கள் இன்று எமக்குத் தேவை'' எனத் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும், நல்லூர் எம். பி.யுமான திரு. எம். சிவசிதம்பரம், அமரர் நாகநாதன் நினைவுதின விழாவில் பேசுகையில் கூறினார்.

நல்லூர் மாவட்டக் கூட்டணிப் பணிமனையில் நடைபெற்ற அமரர் நாகநாதன் நினைவுதினக் கருத்தரங்கிற்கு நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் தலைமைதாங்கினார்.

யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், அமரர் நாகநாதனின் உருவப் படத்தைத் திரைநீக்கஞ்செய்து வைத்தார்.

திரு. எம். சிவசிதம்பரம் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது; ''அமரர் நாகநாதன் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் மண் பறிபோகிறதெனக் குரல்எழுப்பினார். அவர் கூறிய தீர்க்க தரிசனத்தை, இன்று நாம் போராடிப் பாதுகாக்கும் பயங்கரமான நிலையில் நிற்கின்றோம். இன்றைய நிலையில் அவர் எம்முடன் வாழ்ந்திருக்க வேண்டும். ஆனால் அவரைக் காலன் எம்மிடமிருந்து எடுத்துவிட்டான். அவருக்கு 1961ம் ஆண்டுச் சத்தியாக்கிரகமே காலனாக இருந்தது'' என்றார்.

யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் பேசுகையில், ''இன்று இளைஞர்கள் தலைவர்களின் வேகம் காணாதென்று கூறுகிறார்கள், உண்மைதான். காலம் வரும்போது தலைவர்கள் அழைப்பார்கள். அதுவரை எமது இயக்கத்தைப் பலப்படுத்துவதில் ஈடுபடவேண்டும்'' என்றார்.

ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி திரு. எம். தம்பித்துரை உரையாற்றுகையில் கூறியதாவது; ''61ம் ஆண்டு நான் மட்டக்களப்பில் கடமையாற்றியபோது, என்னைச் சத்தியாக்கிரகத்தில் கலந்துகொள்ள வேண்டாமெனப் பணித்தார் டாக்டர் நாகநாதன். காலம் வரும்வரை பொறுத்திருங்கள் என்றார். அந்தளவு தீர்க்க தரிசிகள் இன்று எம் மத்தியில் இல்லாதது பெரும் நஷ்டமாகும்'' என்றார்.

கருத்தரங்கில் வண்ணை ஆனந்தன் உட்படப் பலர் உரையாற்றினர். (செ)

## திரைப்படவிழாவை

### அமைச்சர் ஆரம்பித்து வைப்பார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட கலாச்சார மன்றத்தின் ஆதரவில் நடைபெறும் திரைப் படவிழாவை தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. டி. பி. விஜயதுங்கா ஆரம்பித்துவைப்பார்.

யாழ்ப்பாணம் சாந்தி படமாளிகையில் நடைபெறும் திரைப்பட ஆரம்பவிழாவில் யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனும் கலந்து கொள்வார்.

25-ந் திகதி ஆரம்பமாகும் இவ்விழா 31-ந் திகதிவரை நடைபெறும். தினமும் காலை 10-30 மணிக்கு பாடசாலை மாணவர்களுக்கும் மாலை 6-30 மணிக்கு பொதுமக்களுக்கும் நடைபெறும்.

இத்திரைப்படவிழாவில் பின்வரும் படங்கள் திரையிடப்படும். 25-ந் திகதி பொன்மணி, 26-ந் திகதி மடெல்துவ 27-ந் திகதி த கிரேட் பரியர் ரீப், 28-ந் திகதி தஹாகின் எச்கெக், 29-ந் திகதி வாடைக் காற்று, 30-ந் திகதி ரோமியோ அன்டக்னஸ், 31-ந் திகதி தும்மங் ஹந்தய, (க)

## யாழ்ப்பாணத்தில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

ஒரு கட்டத்தில் சட்டத்தரணி சண்முகலிங்கம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஓர் உறுப்பினராக இருந்துகொண்டு இங்குவந்து தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆதரித்து வாதாடுகிறார் என்று சட்டத்தரணி திரு. குணதிலக்கா கூறியபோது ''நடந்தது கட்சிகளுக்கிடையிலான சண்டையல்ல, வகுப்புக்கலவரம்'' என்று திரு சண்முகலிங்கம் பதிலளித்தார்.

சரட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி வன்முறையைத் தூண்டிவிட்டதாக காட்டும் விதத்திலேயே மகஜர் தாக்கல் செய்திருக்கிறார் அதனையொட்டியே அவரது சாட்சியம் அமைய வேண்டும் என்றும் பாராளுமன்றத்திலோ வேறு எங்கோ நிகழ்த்தப்பட்ட பேச்சுக்களை இங்கு குறிப்பிடுவதில் பயனில்லையென்றும் அவ்வாறு செய்வதாயின் சம்பந்தப்பட்டவர்களும் இங்கு வரவேண்டும். இல்லாவிடில் இதனை ஏற்கமுடியாது என்றும் கமிஷனர் கூறினார்.

## அரசில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தின் பின்னர் அமைச்சரவையில் மாற்றங்கள் செய்யப்படவிருக்கின்றன. இப்போதைய சபாநாயகருக்கு அமைச்சர் பதவியொன்று வழங்கப்படலாம் என்றும், சபாநாயகர் பதவிக்கு வேறு ஒருவர் நியமிக்கப்படலாம் என்று கருதப்படுகின்றது.

திரு. தொண்டமான் அரசுடன் சேரும்பட்சத்தில் அவருக்கு ஏதும் பதவி வழங்கப்படுமா என்பது தெரியவில்லை, மலையகமக்களின் சார்பில் திரு. தொண்டமான் விடுத்த கோரிக்கைகள் பலவற்றை அரசு ஏற்றுக்கொண்டிருப்பதாலும், அரசுடன் சேர்வதால் மேற்கொண்டும் பல நன்மைகளை அந்த மக்களுக்குச் செய்யமுடியும் என்ற சூழ்நிலை இருப்பதாலும் அவர் அரசுடன் சேர்வதுபற்றி ஆலோசிக்கக்கூடும் என்று அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுகின்றது. (ம)

## யானைகளின் அட்டகாசம்

(வண்ணார்பண்ணை)

கிளிநொச்சி திருவையாறு 3ம் பகுதியில் யானைகளில் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக இப் பகுதி குடியேற்ற வாசிகள் யாழ் அரசாங்க அதிபருக்கு புகார் தெரிவித்துள்ளனர். இரவில் கூட்டமாக வரும் யானைகள் காணிகளில் நுழைந்து வாழை மரங்களையும் பயிர் வகைகளையும் அழித்து வருவதாகவும் இரவு நேரங்களில் விவசாயிகள் நடமாட முடியாதவாறு அச்சமடைவதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

இப்பகுதி விவசாயிகளின் துப்பாக்கிகளின் லைசென்சுகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதால் யானைகளை விரட்ட முடியாதிருப்பதாகவும் தெரிய வருகிறது. (ஈ)

## பருத்தித்துறை...

(1ம் கலத் தொடர்ச்சி)

ரியைகளும், கல்லூரிக் காரியாலயத்தில் நண்பகல் 12-30 மணியளவில் பணத்தைப் பிரித்துக்கொண்டிருந்தபோது, 6 இளைஞர்கள் துப்பாக்கியுடன் உள்ளே வந்ததாகவும் விசாரணையில் மேலும் தெரியவந்துள்ளது.

அதிபரும், ஆசிரியைகளும் அதிர்ச்சியடைந்த நிலையிலிருக்கும்போது இளைஞர்கள் அப்பணத்தை எடுத்துச் சென்றதாகவும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

பருத்தித்துறைப் பொலிசார் புலன்விசாரணை செய்துவருகின்றனர். (க)

# எம்.ஜி.ஆர். பற்றி சினிமாப் படம்

## லண்டன் 'பி.பி.சி.' நிறுவனம் தயாரிக்கிறது

### தமிழகத்திலிருந்து 'அந்தனிஜீவா'

சென்னை, ஆக. 22

தமிழக முதலமைச்சா திரு. எம். ஜி. ஆர். பற்றிய சினிமாப் படத்தை லண்டனில் உள்ள ''பி. பி. சி'' நிறுவனம் தயாரிக்கிறது.

**டெலிவிசன்**

எம். ஜி. ஆரின் அன்றாட வாழ்க்கையையும் அனைத்திந்திய அ. தி. மு. க. ஆட்சியையும் சித்தரிக்கும் சினிமாப் படமொன்றை 'பி. பி. சி. நிறுவனம் தயாரிக்கிறது.

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் வாழும் ஒரு கோடி தமிழர்களுக்கு டெலிவிசனில் காட்டுவதற்காக இந்தப்படம் தயாரிக்கப்படுகிறது.

**ராசாராம்**

பி. பி. சி. யின் நிருபர் மிர் சந்தானி, கமராமேன் மார்லோ ஆகியோர் டெல்லியில் தமிழக அரசின் தனிப் பிரதிநிதி திரு. க. ராசாராமை சந்தித்து இந்த சினிமாப் படத்தை தயாரிப்பதற்கான அனுமதியைப் பெற்றனர்.

இவர்கள் சென்னைக்குவந்து சென்னை கோட்டையில்பொது மக்களின் குறைகளை எம். ஜி. ஆர் நேரில் கேட்டறிந்ததையும், மந்திரிசபைக்கூட்டத்தில் கலந்து கொண்டதையும் படமாக்கினார்கள்.

மதுரையில் எம். ஜி. ஆர். பங்குகொள்ளும் திருமணம், கேள்விகளுக்குப் பதில் அளிப்பது ஆகிய நிகழ்ச்சிகளும் படமாக்கப்படும். (வெள்ள. நிரு.)

## தமிழருக்கு...

[1-ம் பக்கதொடர்ச்சி]

வித்து அஞ்சலி செலுத்தினர்.

போதுசன நூல்நிலைய கேட்போர் கூடத்தில் மலேசியாவைச் சேர்ந்த திரு. துரைராஜசிங்கத்தின் அன்பளிப்புத் தொகுதி நூல்களும், ''ஈழநாடு'' பத்திரிகையில் வெளியான ஆனந்தகுமாரசாமி பற்றிய கட்டுரைகளும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

திரு. சு. வித்தியானந்தன் தொடர்ந்து உரையாற்றுகையில், ''கொழும்பில் செல்வி மஞ்சுளா துரைராஜாவின் 40 ஓவியங்களை அதிர்ஷ்டவசமாகப் பார்க்க நேர்ந்தது. அன்றுதான் அவரின் திறமையை என்னால் எடைபோட முடிந்தது. சிறிய வயதில் சிறந்த கற்பனை வாதியாக கலையுலகில் பிரகாசிக்கின்றார்'' என்றார்.

ஆனந்த குமாரசாமி தமது ஆராய்ச்சிகளை 500க்கு அதிகமான நூல்களாக வெளியிட்டார். அன்னாரைப்பற்றி 100க்கு அதிகமானவை எழுதப்பட்டுள்ளன. அவற்றில் ஒருதொகை மட்டும் இங்கே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன என்றார்.

யாழ். மாநகரசபை விசேட ஆணையாளர் திரு. கே. சிவஞானம் உரையாற்றுகையில், இன்றைய கண்காட்சி இளைய சமுதாயத்திற்கு பெருமையளிக்கும். கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமியின் வாழ்க்கை வரலாற்றையும் அன்னார்மேற்கொண்ட ஆராய்ச்சிகளையும் எமக்கு அறிய இவை உதவுகின்றன என்றார். (செ)

## கென்யா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருந்தார.

திரு. கென்யாட்டா மரணமாகும்போது அவருக்கு 89 வயது.

கென்யாவில் தலைகொய்யும் பயங்கரவாதிகளின் இயக்கமான 'மாவ்மாவ்' இயக்கத்தை இவர் நடத்திய காலத்தில் இவரை வெள்ளையர்கள் ஒரு பயங்கரவாதியாகவே கருதிவந்தார்கள்.

# மானிப்பாய் சங்கத்திலும் கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் துப்பாக்கியுடன் நுழைந்த மூன்று இளைஞர்கள், காசாளரைப் பயமுறுத்தி, 1,000 ரூபாயைக் கொள்ளையடித்துக்கொண்டு மறைந்துவிட்டதாகப் பொலிசில்புகார்செய்யப்பட்டுள்ளது.

நேற்று மாலை 5 மணியளவில் நடைபெற்ற இச்சம்பவம் பற்றிக் கேள்விப்பட்டவுடன் ஆனைக்கோட்டைப் பொலிஸார் ஸ்தலத்திற்கு விரைந்தனர்.

இக்கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கருதப்படும் இளைஞர்களை அடையாளம் காட்டமுடியுமெனச் சங்க ஊழியர்கள் கூறியுள்ளனராம். எவரும் கைதுசெய்யப்படவில்லை.

பளையில் சம்பவம்:

# தாக்கப்பட்டவர்

## ஆஸ்பத்திரியில் மரணம்

[யாழ்ப்பாணம்]

பளையில் நடந்த தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து ஆளியவளையைச் சேர்ந்த சின்னத்தம்பி என்பவர் பலியானார்.

18-ந் திகதி ஒரு கலியாண வீடு நடந்ததாகவும் அதைத் தொடர்ந்து 19-ந்திகதி நடந்த விருந்தின் பின்னால் இத் தாக்குதல் சம்பவம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

உதவி பொலிஸ் அதிபர் திரு. ஆனந்தராசா சம்பவம் நடந்த இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டார்:

தாக்குதலுக்குள்ளானவர் யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார். சந்தேகநபரை பொலிஸார் தேடிவருகின்றனர்.

## விவசாயிகள் விழா

[யாழ்ப்பாணம்]

துணுக்காய் - வவனிக்குளம் இளம் விவசாயிகள் விழா இன்று மாலை யோகபுரம் -ம் யூனிற் மகாவித்தியாலய அரங்கில் நடைபெறுகின்றது.

செல்வன் ந. சிவபாதராசா தலைமையில் நடைபெறும் விழாவில் முல்லைத்தீவு எம்.பி. திரு. சே மா. செல்லத்தம்பு பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

விழாவில் கலை நிகழ்ச்சிகள் விவசாய அறிவுப் போட்டியும் இடம் பெறும். [சே]

## மரண அறிவித்தல்

### அ. இராசரத்தினம்

காங்கேசன்துறையைச் சேர்ந்த மலாயன் பென்சனியரும், முன்னைநாள் பட்டினசபைத் தலைவருமாகிய திரு. அ. இராசரத்தினம் சிவபதமடைந்துவிட்டார். இவர், சிவானந்தசோதி (சுவாமிஜோதி), சிவஞானசோதி (இலங்கை வங்கி, கொழும்பு), இரத்தினசோதி (பொறியியல் கூட்டுத்தாபனம், கொழும்பு), சந்திரமதி, டாக்டர் தவசோதி (U. K.) ஆகியோரின் அன்புத் தந்தையும், இரத்தினவதி, பராசக்தி, கனகரத்தினம் (பிரதான பொறியியலாளர், திருக்கோணமலை), டாக்டர் செல்வநாயகி (U. K.) ஆகியோரின் மாமனுருமாவர்.

ஈமக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். 0121

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu, Telephone 389 - Registered as a Newspaper in SriLanka